1980 பிப்ரவரி 4]

(ஆ) ஆய்வு முடிந்து திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அரசின் ஒப்புதல் பெற்றபின் திட்டம் செயல்படுத்தப் படும்.

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, இந்த வெலிங்டன நீர்த்தேக்கத்தின கீழ் ஏறத்தாழ 32,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் நன்மை அடையும் வகையில் அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அரசு தகுந்த நடவடிக்கைகளை உரிய காலத்திலே எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னத்தடாகம் நீர்த்தேக்கத் திட்டம்.

*வினா எண். 36—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொண்டாமுத்தூர் தொகுதியிலுள்ள "சின்னத்தடாகத்தில்" ஒரு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) 1976-க்கு முன்னதாகவே இது ஆய்வுக்கு எடுக்கப் பட்டு ஆரம்ப வேலைகளும் நடத்தப்பட்டு இடையில் நின்று விட்டதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில் அதன் தொடர்ச்சியாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) இது ஒரு புதிய திட்டம். தற்பொழுது ஆய்வில் உள்ளது. அதன்படி கோவை தாலுகாவிலுள்ள சரவணாம் பட்டி சின்னவேடம்பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 512 ஏக்கர் புன்செய் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமாயின், இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

[1980 பிப்ரவரி 4

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, தொண்டாமுத்தூர் தொகுதியில் சின்னத தடாகத்தில் உள்ள இந்த நீர்த் தேக்கத் திட்டம் ஏறத்தாழ 58 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் போடப்பட்டு, அதிலே அன்று * * * நிறுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தை மீண்டும்......

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தாங்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். கவனித்திருந்தால் இந்தக் கேள்வியை அனுமதித்திருக்க மாட்டீர்கள் என்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை நான் கவனிக்கவில்லை; அதைத் திருப்பிக் கேளுங்கள்.

திரு. க. அன்பழகன்: தயவுசெய்து திருப்பிக் கேட்கச் சொல்லக் கூடாது. அப்படிக் கேட்கச் சொல்வது தவறு. ஒரு முறை திட்டுகிறார் என்றால், அதை தாங்கள் கவனிக்காமல் இருந்தால், துறைச் செயலாளரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமே அல்லாமல் உறுப்பினரையே திரும்பக் கேட்கச் சொல்லும் முறை தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்கள் பேரவைத் தலைவருக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்.

திரு. க. அன்பழகன்: நான் தங்களுக்கு உதவுவதற்காகத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன சொன்னார் என்று கேட்டுவிட்டு, தவறாக இருந்தால் எல்லாவற்றையும் நீக்கி விடுகிறேன்.

திரு. க. அன்பழகன்: அவர் ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்கிறார். ஏற்கெனவே அரை மணி நேரத்திற்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு கருத்தை தாங்கள் அனுமதிக்கவில்லை. இதை தாங்கள் கவனிக்காததால் அனுமதித்து விட்டீர்கள். அதைத் திரும்பக் கேட்பதாக இருந்தால் இந்த அவையை தாங்களே அவமதிப்பதாகும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1980 பிப்ரவரி 4]

[முற்பகல் 10-00.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு அமைப்பு பற்றிய குற்றச்சாட்டைச் சொல்லி இருந்தால் அதை நான் அனுமதிக்க முடியும். ஆனால் ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைப் பற்றிக் குற்றச்சாட்டு சொல்லி இருந்தால் அதை என்னால் அனுமதிக்க முடியாது. ஆகவே * * * என்று சொல்லி இருந்தால் அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே நின்று விட்ட திட்டம். 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்கெனவே இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும் என்று இருந்தது. ஆனால் இது இடையிலே தடுத்து நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே அதை நிறுவுவதற்கு மீண்டும் அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன். 1976-க்கு முன்னதாகவே இந்தத் திட்டத்தினுடைய ஆரம்ப வேலைகள் நின்று விட்டன. ஆகவே அதைக் கவனத்தில் கொண்டு அதனை மீண்டும் நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சின்னத் தடாக நீர்த் தேக்க திட்டம் என்பது 50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட ஒரு திட்டமாக முந்தைய ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே இந்தத் திட்டம் முந்தைய ஆட்சிக்காலத்திலேயே தயாரிக்கப்பட்டு சிலருடைய தூண்டுதல் காரணமாக கைவிடப்பட்டுவிட்ட திட்டம். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆட்சிக் காலத்திலாவது அந்தத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்தத் திட்டம் யாருடைய தலையீடு காரணமாக நிறுத்தப்பட்டது என்பதை அறிந்து உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கண்டிப்பாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டரை ஆண்டுக் காலமாக இந்தத் திட்டம் நடைபெறாமல் நிறுத்தப்பட்டதற்கான காரணத்தை அறிவிப்பார்களா? அதைப்போலவே பல திட்டங்கள் அன் எக்கனாமிக்கல் ஸ்கீம் என்ற அடிப்படையில் நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா? ஆகவே அந்தத் திட்டங்களைத் தொடர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்ற காரணத்தாலே, நான் பதில் சொலலக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நான் ஒருசில தகவல்களைத் தரும்பொழுது அவற்றைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது, ஒரு குறிப்பிட்ட சிலரைத் தாக்கிப் பேசுகிறேன் என்றும் எடுத்துக் கொள்ளக்கூடாது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களைப் பற்றியோ தனிப்பட்டவர்களைப்பற்றியோ சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, கேள்வி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைப் பொதுவாகக் கேட்டிருக்கிறார். ஆகவே பொதுவான சில கருத்துக்களை மட்டும் சொல்ல வேண்டும். தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, நான் பொதுவாக வேண்டுமானாலும் சொல்கிறேன். முன்பிருந்த ஆட்சிக் காலத்தில்தான் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போதிருந்த ஆளும் கட்சிக்காரர்களுடைய சில நலன்கள் பாதிக்கப்படுகிறது என்கிற காரணத்திற்காகத்தான் இந்தத் திட்டம் அப்போது தள்ளிவைக்கப்பட்டது. ஆனால் இத்திட்டம் நல்ல திட்டமாக, விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற திட்டமாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் திட்டத்தை மீண்டும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது. பொருளாதார ரீதியில் சில திட்டங்கள் நமக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களாக இல்லாத காரணத்தால்தான் ஒரு சில திட்டங்கள் தள்ளி வைக்கப்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

1980 பிப்ரவரி 4]

ஆனால் இந்த அரசைப் பொறுத்த அளவிலே நல்ல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் பொருளாதார ரீதியில் கணக்கு வைத்து அதாவது ஒரு ரூபாய் செலவழிக்கிறோம் என்று வைத்துக்கொண்டால் அதனாலே ரூ. 1·50 வருவாய் வந்தால தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே திட்டங்கள் தீட்டப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இன்று இருக்கக்கூடிய ஆட்சிக் காலத்தில் பொருளாதார ரீதியில் மட்டும் அல்லாது, விளைகின்ற பயிரின் அடிப்படையில் திட்டங்கள் போடப்பட்டு செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோவை மருத்துவக் கல்லூரிக்கான நன்கொடை.

* வினா எண். 37—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கு 25 லட்சம் ரூபாய் நன்கொடை தருவதாக கோவையைச் சேர்ந்த இரண்டு தர்ம ஸ்தாபனங்கள் அரசுக்கு உறுதியளித்திருந்தனவா ?

(ஆ) ஆம் எனில் இதுவரை எவ்வளவு தொகை தரப்பட்டுள்ளது ?

(இ) பாக்கியிருந்தால் எப்போது வசூலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) ஐந்து லட்சம் ரூபாய்.

(இ) பாக்கி இருபது இலட்ச ரூபாயை கொடுக்க இயலாது என்று கோயம்புத்தூரைச் சேர்ந்த குப்புசாமி நாயுடு தர்ம ஸ்தாபனத்தின் தலைவர் கூறிவிட்டார்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி ஒன்று அங்கே கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வைத்து அந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அந்த தர்ம ஸ்தாபனங்கள், அது ஒரு தர்மஸ்தாபனமா அல்லது இரண்டு தர்ம ஸ்தாபனங்களா என்பதையும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று கேட்டுக்கொள்வதோடு அந்த தர்ம ஸ்தாபனங்கள் 25 லட்சம் ரூபாய் நன்கொடை